# காவல்துறையின் சிறப்புச் சான்று

# 2002




ஈரோடு மாவட்டக் காவல்துறையின் சார்பில் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி 2002 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை மொத்தம் 33 வாரங்கள் சட்டம் , விழிப்புணர்வு , பால்நுண்ணுணர்வு மற்றும் புத்தாக்கப் பயிற்சிமுகாம் நடைபெற்றது.

ஈரோடு மாவட்டத்திலுள்ள காவல்துறை உயர்மட்ட அதிகாரிகளிலிருந்து அடிப்படைக் காவலர்கள்வரை அனைவரும் வாரத்திற்கு 100 பேர் கொண்ட குழுவினர் வீதம் 33 வாரங்களுக்கு மொத்தம் 3,300 பேர் இம்முகாமில் பங்கேற்றனர்.

மொடக்குறிச்சி அருகில் சாமிநாதபுரத்தில் ஒரு கிராமியச் சூழலில் அனைத்து வசதிகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்முகாமில் வெள்ளிக்கிழமைதோறும் காலை 10 மணி முதல் 12 மணி வரை இரண்டு மணிநேரம் வீதம் த.ஸ்டாலின் குணசேகரன் சட்டத்துறை மற்றும் சமூக விழிப்புணர்வு சார்ந்த வல்லுனராகப் பங்கேற்றுக் காவலர்களுக்குப் பயிற்சியளித்தார்.

இம்முகாம் நடைபெற்ற 33 வாரங்களும் இவர் பங்கேற்று காவலர்களுக்குச் சட்டப் புத்தாக்கப் பயிற்சியளித்ததைப் பாராட்டி கூடுதல் டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலிஸ் திருமதி ஜி.திலகவதி ஐபிஎஸ் உள்ளிட்ட காவல்துறை உயர் அதிகாரிகளால் நிறைவுநாள் நிகழ்வில் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்குச் சிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.